لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

## உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





நவம்பர் - 2008    விலை ரூபாய் 7/-

# குர்பானி

## திருக்குர்ஆனிலிருந்து...

''ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அவர்களுக்கு அளித்துள்ள கால்நடைகள் மீது, அல்லாஹ்வின் பெயர் கூறப்பட நாம் குர்பானியின் ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளோம். உங்கள் இறைவன் ஒருவனே ஆவான். எனவே அவனுக்கே கட்டுப்படுங்கள். (இறைவனுக்கு) பணிபவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக''. *(22:35)*

''நாம் உங்களுக்கு குர்பானிக்குரிய ஒட்டகங்களையும் அல்லாஹ்வின் புனித அடையாளங்களைச் சார்ந்தவையாக ஆக்கியுள்ளோம். அவற்றில் உங்களுக்கு மிகுந்த நன்மை உள்ளது. எனவே நீங்கள் அவற்றை வரிசைகளாக நிறுத்தி அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறுங்கள். அவை நிலத்தில் சாய்ந்து விட்டால், அவற்றி(ன் இறைச்சி)யிலிருந்து நீங்களும் உண்ணுங்கள். (தமது வறுமையிலும்) போதுமென்ற மனமுடையவருக்கும் (வறுமையினால்) கவலைக்குள்ளாகியிருப்பவருக்கும் உணவளியுங்கள். இவ்வாறு நாம், நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அப்பிராணிகளை உங்கள் பயனிற்காக உருவாக்கியுள்ளோம்.

அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம் தான் அவனை சென்றடைகின்றது...'' *(22:37-38)*

## நபிமொழியிலிருந்து...

''கொம்புள்ள, கால்களிலும், வயிற்றிலும் கண்களிலும் வெள்ளை நிறமுள்ள ஓர் ஆண் செம்மறியாட்டைக் கொண்டு வருமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அது கொண்டு வரப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், கத்தியைக் கொண்டு வாருங்கள்; அதை கல்லின் மீது உராய்த்து கூர்மையாக்குங்கள் எனக் கூறினார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அவ்வாறே செய்தேன். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கத்தியை வாங்கினார்கள். ஆட்டைப் பிடித்து அதனைப் படுக்க வைத்தார்கள். அறுக்கும் போது, பிஸ்மில்லாஹ். தகப்பல் மின் முஹம்மதின் வஆலி முஹம்மதின் வ உம்மத்தி முஹம்மதின் பிஸ்மில்லாஹ் எனக் கூறினார்கள்''.

(பொருள் : அல்லாஹ்வே! நான் உன் பெயரால் அறுக்கின்றேன். நீ இந்தக் குர்பானியை முஹம்மதின் சார்பாகவும், முஹம்மதின் குடும்பத்தார் சார்பாகவும், முஹம்மதின் சமுதாயத்தின் சார்பாகவும் ஏற்றுக் கொள்வாயாக).

''பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அதன் மீது கத்தி வைத்து அறுத்து குர்பானி கொடுத்தார்கள்''. *(ஸஹீஹ்முஸ்லிம்)*

**தொடர்ச்சி 8-ம் பக்கம்...**

பெருநாள் பேருரை

# தியாகத் திருநாள்

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **20-12-2007** அன்று ஆற்றிய ஈதுல் அழ்ஹா குத்பாவின் துவக்கத்தில் பின்வரும் திருக்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்:

''(குர்பானியாகிய) அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக, உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம்தான் அவனை சென்றடைகின்றது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியினைக் காட்டியதற்காக, நீங்கள் அவனது பெருமையினை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான். நற்செயல் செய்பவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக.'' (22:38)

இன்று நாம் ஈதுல் அழ்ஹாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இது குர்பானியின் பெருநாள் என்றும் அழைக்கப் படுகிறது. இந்தப் பெருநாளில் எவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறதோ அவர்கள் கால்நடை களை குர்பானி கொடுக்கின்றார்கள். பிறகு அது மட்டுமல்லாமல், ஹஜ் செய்பவர்களின் சார்பாக இலட்சக்கணக்கான கால்நடைகள் குர்பானி செய்யப்படுகின்றன. இவ்வாறு இன்று அல்லது நாளை உலகம் முழுவதிலும் கோடிக்கணக் கான கால்நடைகள் அறுக்கப்படுகின்றன. ஆனால் ஆடுகள், மாடுகளை அறுப்பதும், அவற்றின் இறைச்சிகளை நாமும் உண்டு உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உண்ணக் கொடுப்பதும் மட்டும் தான் இந்தக் குர்பானியின் குறிக்கோளா? நீங்கள் இன்று ஆடுகளையும், மாடுகளையும் உங்களுக் காகவும் மற்றவர்களுக்காகவும் அறுப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் என அல்லாஹ் கூறுகிறானா என்ன? இங்கு (பள்ளி வாயிலுக்கு) வந்து இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு விரும்பியோ, விரும்பாமலோ பெருநாள் குத்பாவைக் கேட்டுவிட்டு சீக்கிரம் வீட்டை நோக்கி ஓடிச் சென்று கால்நடையை அறுத்தால் போதுமானதா?

பாகிஸ்தானிலெல்லாம் நாம் பெருநாள் தொழுகையை தொழுதுவிட்டு திரும்பிக் கொண்டிருக்கும் போதே அஹ்மதியல்லாத பிற முஸ்லிம்கள் தமது குர்பானியை அறுப்பதை யும், இன்னும் சிலர் தோலையும் உரித்து இறைச்சியையும் வெட்டுவதைப் பார்க்க முடிகிறது. பெரும்பாலானவர்கள் - குறிப்பாக இறைச்சி வெட்டுபவர்கள் பெருநாள் தொழுகையே தொழுவதில்லை அல்லது குறைந்தபட்சம் பெருநாள் குத்பாவை கேட்பதில்லை என்பது தெளிவாகிறது. ஆக, எப்படியிருந்த போதிலும் அறுத்து, அதன் இறைச்சியை சாப்பிட வேண்டும் என்பதைப் பற்றிய அக்கறை மட்டும் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகை, பெருநாள் குத்பாவுக்குப் பிறகு குர்பானியின் இறைச்சியை வைத்து காலையுணவு அருந்தினார்கள். எனினும் அவர்கள் இந்தக் குர்பானியின் உண்மை உயிர் நாடியைப் புரிந்திருந்தார்கள் என்பதையும், தமது சமுதாயத்தில் இந்த உயிர் நாடியை நிலை நாட்டுமாறு அவர்கள் அறிவுறுத்தி வந்தார்கள் என்பதையும் நம்மில் பலர் மறந்து விடுகிறோம்.

பெருநாள் தொழுகைக்குப் பிறகு கால்நடையை அறுத்து அதன் இறைச்சியை சாப்பிட வேண்டும் என்பது மட்டும் இந்தப் பெருநாளின் குறிக்கோள் அன்று. இந்த தியாகத் திருநாளுக்குப் பின்னால் பல தியாகங்களின் நீண்ட வரலாறு இருக்கின்றது. அது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களிடமிருந்து துவங்கியது. அதில் அவர்களின் மனைவி ஹாஜிராவும், மகன் இஸ்மாயீல் (அலைஹுஸ்ஸலாம்) அவர்களும் ஈடுபட்டார்கள். அதன் முடிவு எல்லை ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் வந்து நிறைவுற்றது. அன்னாரின் சஹாபிகளும் அன்னாரிடமிருந்து பயன் பெற்றவாறு இதற்கான முன்னுதாரணங்களை நிலைநாட்டினார்கள்.

எனவே, ஒவ்வோர் ஆண்டில் பெருநாள் வரும் போதும் அதிலிருந்து நமது தியாகத்தின் தகுதியை எவ்வாறு உயர்த்த முடியும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் நமது ஆடு, மாடுகளை அறுப்பதில் அல்லாஹ்வுக்கு எந்த நோக்கமுமில்லை. அல்லாஹ் எந்த நோக்கத்திற்காக மனிதனைப் படைத்தானோ அந்த நோக்கத்தை முழுமை செய்யும் மனிதனை அல்லாஹ் பார்க்க விரும்புகிறான். மற்றபடி, இந்த இறைச்சிகள் வெறும் அறுப்பதற்காக மட்டும் செய்யப்படுமென்றால் அது இறை திருப்தியைப் பெறுவதற்குக் காரணமாக அமையாது. இந்தக் குர்பானியின் இறைச்சியும், இரத்தமும் அல்லாஹ்வை ஒருபோதும் சென்றடைவதில்லை. எனவே நாம் ஒவ்வோர் ஆண்டும் ஈதுல் அழ்ஹாவை கொண்டாடும்போது இந்தக் குர்பனிகளுக்குப் பின்னால் இருக்கின்ற-இருக்க வேண்டிய அந்த உயிர் நாடி என்ன என்பதையும் அல்லாஹ் இந்த (22:38) வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: ''உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம் அவனை சென்றடைகின்றது''.

குர்பானியின் இந்தத் தத்துவத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

''இறைவன் இஸ்லாமிய ஷரீஅத்தில் பல அவசியமான செயல்களுக்காக பல முன்மாதிரிகளை நிலைநாட்டியுள்ளான். உதாரணமாக, மனிதன் தனது முழு ஆற்றலுடனும் முழு மனதுடனும் இறைவனின் வழியில் தியாகமாக வேண்டும் என்ற கட்டளை மனிதனுக்கு உள்ளது. எனவே வெளிப்படையான தியாகங்கள் இந்த நிலைமைகளுக்காகவே முன்மாதிரியாக்கப்பட்டுள்ளன. ஆனால், உண்மையான குறிக்கோள், (தன்னை அர்ப்பணிக்கும்) இந்த தியாகம்தான். இதனால் தான் 'குர்பானியின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் அல்லாஹ்வை சென்றடைவதில்லை; ஆனால் உங்களிடமுள்ள இறையச்சம் அல்லாஹ்வை சென்றடைகிறது' என்று அல்லாஹ் கூறுகிறான். அதாவது இறைவனுக்கு எந்த அளவுக்கு அஞ்ச வேண்டுமென்றால், நீங்கள் அவன் வழியில் மரணித்தே விடவேண்டும். நீங்கள் உங்கள் கைகளால் குர்பானிகளை அறுப்பதைபோன்று நீங்களும் அவன் வழியில் தியாகமாகி விடுங்கள். இந்த தரத்தைவிட குறைவாக இருக்கும் தக்வா (இறையச்சம்) இன்னும் குறைபாடுள்ளதுதான்''. *(சஷ்மயே மஅரிஃபத் பக்கம் 91 அடிக்குறிப்பு)*

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''அச்சம், அன்பு, மதிப்பளித்தல் ஆகியவற்றின் ஆணி வேர் முழுமையான இறைஞானம் தான். எனவே எவருக்கு முழுமையான இறை ஞானம் வழங்கப்பட்டதோ அவருக்கு முழுமையான இறையச்சமும், இறை நேசமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எவருக்கு முழுமையான இறையச்சமும், இறை நேசமும் வழங்கப்பட்டதோ அவருக்கு இறையச்சமின்மையினால் உருவாகும் எல்லா பாவங்களிலிருந்தும் ஈடேற்றம் வழங்கப்

படுகிறது. **எனவே இந்த ஈடேற்றத்தைப் பெறுவதற்கு நமக்கு எவருடைய இரத்தமும் தேவையில்லை, எந்தவொரு சிலுவைக்கான தேவையுமில்லை. எந்தவொரு (அப்பாவியும் பலியாகி) பாவத்திற்கு பரிகாரமாக வேண்டிய தேவையுமில்லை. மாறாக, இதற்கு நாம் நமது நஃப்ஸை தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.** இந்தத் தேவையைத்தான் நமது இயல்பு எடுத்துரைக்கின்றது. இத்தகைய தியாகங்களின் மறு பெயர்தான் இஸ்லாம் என்பதாகும். இஸ்லாம் என்பதன் பொருள், பலியாவதற்காக தன் கழுத்தை முன்னால் வைத்தல் என்பதாகும். பலியாவதற்காக மன மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் தனது கழுத்தை முன்னால் வைப்பதற்கு முழுமையான இறை நேசமும், பாசமும் தேவை. இதைத்தான் அல்லாஹ் திருக்குர்ஆனில், (குர்பானியாகிய) அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் அல்லாஹ்வை சென்றடை வதில்லை. ஆனால் உங்களிடமுள்ள இறையச்சம் அவனை சென்றடைகிறது என்று சுட்டிக் காட்டியுள்ளான். அதாவது நீங்கள் எனக்கு அஞ்சுவதும் எனக்காக தக்வாவை மேற்கொள்வதுமாகிய குர்பானிதான் என்னை வந்தடையும்''.

*(லக்சர் லாஹூர் பக்கம் 5-6)*

எனவே (குர்பானி கொடுக்கும்) வெளிப்படையான இந்த முன்மாதிரிகள், இந்த உயிர்நாடியை நிலைநாட்டுவதற்காகத் தான். எனவே நாம் நமது வெளிப்படையான குர்பானிகளுக்குப் பின்னால் ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிலைநாட்டச் சொன்ன அந்த உயிர்நாடியை உருவாக்க வேண்டும்; முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வைப் பற்றிய முழுமையான ஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த முயற்சியினால்தான் ஹஸ்ரத் ஹாஜிரா மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலைஹுமஸ்ஸலாம்) அவர்கள் இருவரும் தம்மை இறைவனுக்காக அர்ப்பணித்து விட்டார்கள். அதனால்தான், ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) அவர்கள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களிடம், அல்லாஹ் வின் கட்டளையினால் நீங்கள் எங்களை தனியாக பாலைவனத்தில் விட்டுச் செல்கின் றீர்கள் என்றால் இந்த தியாகத்தை நாங்கள் ஏற்கத் தயார் எனக் கூறினார்கள். ஏனெனில் இறை கட்டளைக்கு முன்னால் நமது உயிருக்கு என்ன மதிப்பு இருக்கிறது?

பிறகு, மகனின் உயர்தரத்தையும் பாருங்கள்! தந்தையின் தர்பிய்யத்தின் காரணமாக மகன் சிறிய வயதுடையவராக இருந்த போதிலும், இறையச்சத்தின், இறையன்பின் ஆழமான தாக்கங்களை புரியாதிருந்த போதிலும் தந்தையே! உமக்கு கட்டளையிடப்பட்டதை நீர் நிறைவேற்றுங்கள் எனக் கூறினார்.

ஆக, இதுதான் அந்த தாய், தந்தை, மகனின் உயரியதரமாகும்! அவர்களின் தியாகத்தின் நினைவாக அல்லாஹ் இந்த தியாகப் பெருநாளை என்றென்றைக்குமாக நிலை நாட்டி விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தண்ணீரோ உணவுகளோ இல்லாத பாலைவனத்தில் தம் மனைவியையும், மகனையும் இறை கட்டளையினால் தனியாக விட்டு வந்த தன் மூலம் இறைவிருப்பத்திற்கு முன்னால் தமது கழுத்தையும் வைத்து விட்டார்கள். இதுதான் முழுமையான கட்டுப்படும் தன்மையாகும்; தியாகமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று இத்தகைய தியாகத்தின் மறுபெயர்தான் இஸ்லாம் என்பதாகும்.

எனவே தியாகம், முழுமையாகக் கட்டுப்படுதல், பின்பற்றுதல் ஆகிய இந்த பண்பினால்தான் அல்லாஹ் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தை ஒப்புக் கொண்டான். அதற்கு ஓர் அந்தஸ்தை

வழங்கினான். மேலும் அந்த தியாகத்தை இறைவன் வீணாக விட்டு விடவில்லை. தாயும் மகனும் பாதுகாப்பாக இருந்தது மட்டுமல் லாமல் கொஞ்ச காலத்திலேயே அந்த இடத்தைச் சுற்றி மக்கள் குடிபெயர ஆரம்பித்து விட்டார்கள். பிறகு அல்லாஹ் பாலைவனத் திலுள்ள அந்த மைதானத்தில் மிகப் பழமை யான ஓர் இறை ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டி, மீண்டும் அதனை தனது அடித்தளத்தில் நிலைநாட்டுமாறு கட்டளையிட்டான்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மீண்டும் வந்தபோது ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் சேர்த்துக் கொண்டு கஅபாவிற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அப்போது அந்தப் பணியை அல்லாஹ் ஒப்புக் கொள்ளுமாறும், அந்த இடம் இனி எப்பொழுதும் மக்களால் நிரம்பி காணப்படுவது மட்டுமல்லாமல், அந்த நகரம் எப்பொழுதும் அமைதிக்குரிய நகரமாக விளங்க வேண்டும் எனவும், அங்கு எந்த விதமான இரத்தம் சிந்துதலும் இருக்கக் கூடாது எனவும் அங்கு வாழ்பவர்களுக்கு இறைவன் புறமிருந்து கனிகளிலிருந்து உணவுகள் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் எனவும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) துஆ வேண்டினார்கள். எல்லாவற்றையும் விட மேலாக எங்களையும் நன்மைகளில் நிலைநிறுத்துவாயாக. எங்க ளுடைய தலைமுறைகளிலும் உனக்குக் கட்டுப்படக் கூடிய, தியாகம் செய்யக் கூடியவர்கள் உருவாக வேண்டும் எனவும் துஆ வேண்டினார்கள்.

பிறகு, வருங்காலத்தில் மறுமை வரை உருவாகக் கூடிய மனித குலம் நிலை நிற்பதற்குத் தேவையான ஒரு நபியைப் பற்றியும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) துஆ செய்தார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்களை விட மேலான தியாகங்களை செய்யக் கூடிய ஓர் இறை தூதர் தமது தலைமுறையில் தோன்ற வேண்டும் என துஆ செய்தார்கள். அந்த துஆ இதுதான்:

‘‘எங்கள் இறைவா! அவர்களிலிருந்தே அவர்களுக்கு மத்தியில் உனது வசனங்களை ஓதிக் காண்பிக்கின்ற, அவர்களுக்கு வேதத்தை யும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை தூய்மைப்படுத்துகின்ற ஓர் இறை தூதரை நீ எழுப்புவாயாக. நிச்சயமாக நீ வல்லவனும், ஞானமிக்கவனுமாவாய்’’. (2:130)

அல்லாஹ் இந்த துஆவை ஏற்றுக் கொண்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த மகத்தான துஆவின் விளைவாகத் தோன்றிய நபிதான் நான் என அறிவிக்குமாறு கூறினான். எங்களுக்கு எங்களின் தியாக வழிமுறைகளைக் காட்டித் தருவாயாக என ஹஸ்ரத் இப்ராஹீம், இஸ்மாயீல் (அலைஹுமஸ்ஸலாம்) அவர்கள் இறைவனிடம் துஆ கேட்டார்கள். ஆனால் இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், இந்த தியாகங்கள், இறைவணக் கங்களின் அனைத்து உயர் தகுதிகளும் என்னோடு முடிந்து விட்டன என அறிவிக்குமாறு கூறினான். (அதன் உச்ச எல்லையை நான் அடைந்து விட்டேன்.) நான் எத்தகைய முழுமையான மகத்தான நபி என்றால் இதில் மனிதனுடைய ஆற்றல், திறமைகளின் உச்ச எல்லையின் முடிவை

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

அடைந்து விட்டேன். இனி புதிய வழிமுறையைக் கற்பதற்கான பேச்சுக்கே இடமில்லை. மாறாக, என்னுடையதென்று எதுவும் இல்லாத அளவுக்கு நான் இறைவனிடம் என்னை மாய்த்துக் கொண்டுவிட்டேன். இதைக் குறித்துத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு அறிவிக்குமாறு கட்டளையிடுகிறான்:

''நீர் கூறுவீராக: எனது தொழுகையும், எனது தியாகங்களும் எனது வாழ்க்கையும், எனது மரணமும் அனைத்து உலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும்''. (6:163)

ஆக, மகத்தான நபியை தோற்றுவிப்பாயாக என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) செய்த துஆ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலம் நிறைவேறிவிட்டது. இந்த நபியின் வணக்கங்களும், தியாகங்களும் முன்னவர்களுக்கும், அக்காலத்தவர்களுக்கும், பின்னவர்களுக்கும் முன்னுதாரணமாக இருக்கக் கூடிய தகுதியைப் பெற்று விட்டன. இதற்கு வெளியில் இருக்கும் எந்தவொரு வணக்கமும், வணக்கம் என்று அழைக்கப்படவும் முடியாது; எந்தவொரு தியாகமும், தியாகம் என அழைக்கப்படவும் முடியாது. முழுமையான மனிதர், காத்தமுல் அன்பியாவாக இருப்பதற்கு இதுவே அடையாளமாகும்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கியிருக்கின்ற இந்த அந்தஸ்து அன்னாருக்கு மட்டுமல்ல. மாறாக உம்மத்துக்கு இடப்பட்ட கட்டளை என்னவென்றால், இந்த ரஸூல் (ஸல்) உங்களுக்கு அழகிய முன்மாதிரியாவார். எனவே இந்த ரஸூலைப் பின்பற்றுவது உங்கள் வாதமாக இருந்தால், இந்த மகத்தான ரஸூல்(ஸல்) காலெடுத்து வைத்த அந்த மகத்தான முன்மாதிரியை நோக்கி நீங்களும் காலெடுத்து வையுங்கள். அப்போது தான் நீங்கள் உண்மையான பின்பற்றுபவர்கள் என அழைக்கப்படுவீர்கள்.

நபித்தோழர்களும் அவ்வாறு காலெடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் மிகச்சிறந்த போர்வீரராக விளங்கினார்கள். அவர்களுக்கு வாழ்க்கையில் கடைசியில் இருந்த வருத்தமெல்லாம், போர்க்களத்தில் மிகபயங்கரமான சூழ்நிலைகளிலெல்லாம் செயல்பட்ட போதிலும் இன்று நமக்கு கட்டிலில் மரணம் வருகிறதே; ஷஹீதாகும் நற்பேறு கிடைக்கவில்லையே என்பதுதான். இத்தகையை ஒரு தூயமாறுதலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் உருவாக்கினார்கள்.

மேலும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் நான்காவது உயிர்ப்பித்தலின் காட்சி அல்லது உயிர்பெற வேண்டியிருந்த நான்காவது பறவை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையான தாசர் (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் அலைஹிஸ்ஸலாம்) மூலமாக உயிர்பெறுவது காட்டப்பட்டிருந்தது. ஏனெனில் இந்த மஸீஹ், மஹ்தி (அலை) அவர்கள் தான் தமது எஜமானராகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராவார். அவர்கள் தமது எஜமானரின் அழகிய முன்மாதிரியின்படி நடந்தவாறு, தமது இறைவணக்கங்களையும், தியாகங்களையும், தமது வாழ்வையும், மரணத்தையும் இறைவனுக்காக ஆக்கிக்கொண்டார்கள். மேலும் தமது ஜமாஅத்திடமும் இந்த உயிரை ஊதினார்கள்.

எனவே, நாம் நமது குர்பானியின் கால்நடைகளை மட்டும் பார்ப்பவர்களாக இல்லாமல், நமது நஃப்ஸுகளை தியாகம் செய்து இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்பவர்களாக இருக்கும்போதுதான் குர்பானியின் நமது பெருநாள் உண்மையான பெருநாளாக இருக்கமுடியும். நாம் கட்டுப்படுதல் என்ற சுமையை நம் கழுத்தின் மீது முழுமையாக தாங்கிக்கொள்ள வேண்டும். நமது

தியாகத்தின் தரத்தை உயர்த்துபவர்களாக இருக்கவேண்டும். அந்த தியாகத்தை உயிருள்ளதாக வைக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்ட இக்கால மக்களும் இத்தகைய தியாகங்களை செய்துள்ளார்கள். அஹ்மதி முஸ்லிம்களில் பலர் தமது உயிரை தியாகம் செய்துவிட்டார்கள். ஆனால் தமது ஈமானுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படவிடவில்லை. எனவே இன்று இறைவனின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு பெருநாளின் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்ற அதே சமயத்தில், அஹ்மதிய்யத்திற்காக உயிர்நீத்த அந்த ஷஹீதுகளையும் உங்கள் துஆக்களில் நினைவிற் கொள்ளுங்கள். அவர்கள் தியாகத்தின் கருத்தைப் புரிந்துக்கொண்டார்கள். அதன் செயல்வடிவமாக மாறினார்கள். அல்லாஹ் அவர்களின் சந்ததிகளின் மீதும் கருணையும் அருளும் புரிவானாக.

இன்று பல நாடுகளில் அஹ்மதிகளுக்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. இதில், பாகிஸ்தானிய அஹ்மதிகளும், இந்தோனேஷிய அஹ்மதிகளும், பங்காளதேசத்திலுள்ள அஹ்மதிகளும், இந்திய அஹ்மதிகளும், இலங்கை அஹ்மதிகளும், ஆப்பிரிக்க அஹ்மதிகளும் தியாகங்களை செய்கின்றார்கள். அஹ்மதிகளாகிய நாம் எந்நிலையிலும் இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கும் அடியானாக மாற முயற்சி செய்யவேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

*அனைவருக்கும் ஈத் முபாரக்.*

தமிழில்:

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

2-ம் பக்க தொடர்ச்சி...

# இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து...

''(குர்பானியாகிய) அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் அல்லாஹ்வை ஒருபோதும் சென்றடைவதில்லை. ஆனால், உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம் அவனை சென்றடைகிறது என அல்லாஹ் திருக்குர் ஆனில் கூறுகிறான். (22:38). உண்மையில் அல்லாஹ் தோலை விரும்புவதில்லை; மாறாக, கனியை விரும்புகின்றான். இறைச்சியும், இரத்தமும் இறைவனை சென்றடைவதில்லை; இறையச்சம் தான் சென்றடைகிறது என்றால் பிறகு குர்பானி கொடுக்க வேண்டிய தேவை என்ன என்ற ஒரு கேள்வி எழுகிறது. அவ்வாறே தொழுகை, நோன்பு தான் உயிர் என்றால், பிறகு வெளிப்படையான செயல் ஏன் தேவை? என்ற கேள்வி எழுகிறது.

இதற்குரிய விடை என்னவென்றால், எவர்கள் உடலிலிருந்து வேலை வாங்குவதை விட்டு விடுகிறார்களோ அவர்களின் ஆன்மா ஏற்றுக் கொள்வதில்லை. பிறகு அந்த உடலில் உண்மையான குறிக்கோளாகிய அர்ப்பணிக்கும் தன்மை, அடியாராகும் தன்மை உருவாக முடியாது. மேலும் எவர்கள் உடலிலிருந்து மட்டும் வேலை வாங்குகின்றார்களோ ஆன்மாவை அதில் ஈடுபடுத்துவதில்லையோ அவர்களும் பயங்கரமான தவற்றில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும் உடலுக்கும் ஆன்மாவுக்கும் இடையே இறைவன் ஒன்றுக்கொன்று ஒரு தொடர்பை வைத்துள்ளான்....... சுருக்கமாக பௌதீக, ஆன்மீக தொடர்கள் இரண்டும் சரிசமமாக இயங்குகின்றன. ஆன்மாவில் பணிவு உருவாகிவிடும் போது உடலிலும் உருவாகி விடுகிறது. எனவே ஆன்மாவில் உண்மையிலேயே பணிவு, தன்னடக்கம் இருந்தால் அதன் தாக்கம் தானாகவே உடலில் வெளிப்பட்டு விடுகிறது. அவ்வாறே உடலில் ஒரு தனி தாக்கம் ஏற்படும் போது அதனால் ஆன்மாவும் தாக்கத்திற்குள்ளாகிறது''. *(அல்-ஹகம் தொகுதி 7 பக்கம் 8. 28-2-1903 பக்கம் 2,3)*

## இலன்டன் பாராளுமன்றத்தில்

# ஒலித்தது இஸ்லாமிய தூதுச் செய்தி!

(யூ.கே பாராளுமன்ற வளாகத்தில் கடந்த 22.10.2008 அன்று நடைபெற்ற ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆன்மீகத்தலைவர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துரைத்தார்கள். ஜிஹாது பற்றிய தவறான கருத்துகளையும் களைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் யூ.கே. வைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், பல நாட்டு தூதுவர்களும், High Commissioner களும் கலந்து கொண்டனர். பாராளுமன்ற வளாகத்தின் ஒரு ஹாலிலேயே கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ளுஹர், அஸ்ர் தொழுகைகளை தொழவைத்தார்கள். இந்நிகழ்ச்சி MTA -வில் ஒளிபரப்பப்பட்டது - ஆசிரியர்)

அளவற்ற அருளாளனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரில் ஆரம்பிக்கிறேன்.

ஒரு மார்க்க அமைப்பின் தலைவருக்கு சில வார்த்தைகளை இங்கு கூற அனுமதித்துள்ள கண்ணியமிக்க விருந்தினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். எமது பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜஸ்டின் கிரினீங் அவர்களுக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன். அவர் தமது தொகுதியைச் சேர்ந்த ஒரு சிறிய மார்க்கப் பிரிவிற்காக அதன் கிலாஃபத் நூற்றாண்டையொட்டி இந்த நிகழ்ச்சியை இங்கு ஏற்பாடு செய்வதற்கு பெருமுயற்சி எடுத்துள்ளார். இது அவரது பெருந்தன்மையையும், திறந்த மனப்பான்மையையும், தனது தொகுதியின் மக்கள் மீதான அவரது அக்கறையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு சிறிய மார்க்க அமைப்பாக இருப்பினும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் பிரதிநிதியாக அது விளங்குகிறது. மேலும் இங்கிலாந்தில் வாழ்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும் தனது நாட்டின் மீது மிகுந்த பற்று கொண்டு அதனை நேசிக்கின்ற குடிமகனாவார் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இது, 'நாட்டுப்பற்று ஈமானின் ஓர் அம்சமாகும்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு வழங்கிய அறிவுரையின் விளைவாகும்.

இக்காலத்தில் மஸீஹாகவும், சீர்திருத்தவாதியாகவும் தோன்றிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் அலை ஹிஸ்ஸலாம் அவர்கள்) இஸ்லாத்தின் போதனைகளை மேலும் விளக்கியும் வலியுறுத்தியும் கூறியுள்ளார்கள். தமது வாதத்தை குறித்து அறிவிக்கும் போது, இறைவன் தன் மீது இரண்டு சுமைகளை சுமத்தியிருப்பதாகவும், அவற்றுள் ஒன்று, இறைவனுக்கு தரவேண்டிய உரிமை எனவும் மற்றொன்று இறைவனது படைப்பினங்கள் மீதான உரிமை எனவும் கூறினார்கள். மேலும் அவர்கள், படைப்பினங்கள் மீதான உரிமைகளை நிறைவேற்றுவதே மிகக் கடினமான சவாலாகும் என்றும் கூறினார்கள்.

கிலாஃபத்தைப் பற்றி நீங்கள் ஒருவேளை அச்சப்படலாம். இந்த ஆன்மீக தலைமையை அடிப்படையாகக் கொண்டு போர்கள் நடத்தப்படும் காலம் வந்து விட்டதோ என்றும், வரலாறு மீண்டும் திரும்புகிறதோ என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் உங்களுக்கு உறுதி தருகிறேன். இஸ்லாத்தின் மீது இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட போதிலும், அஹ்மதிய்யா கிலாஃபத் எப்போதும் அமைதியையும் நல்லிணக்

கத்தையும் உலகில் ஏந்திச் செல்லக் கூடியதாகவும், அதன் உறுப்பினர்கள் எந்த நாட்டில் வாழ்ந்த போதிலும் தத்தமது நாடுகளுக்கு விசுவாச மிக்கவர்களாகவும் திகழ்வார்கள்-இன்ஷாஅல்லாஹ். அஹ்மதிய்யா கிலாஃபத் மஸீஹ் மற்றும் மஹ்தியின் பணிகளை தொடர்ந்து செய்வதை தனது கடமையாகக் கருதுகிறது. எனவே கிலாஃபத்தை குறித்து நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அதன் உறுப்பினர்களின் கவனம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரையறுத்துக் கூறிய, மேற்சொன்ன அந்த இரண்டு கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் திருப்பப்படுகிறது. அதன் மூலமாகவே நாங்கள் உலகில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட முயற்சி செய்கிறோம்.

நேரத்தை கருத்தில் கொண்டு இப்போது நான் எனது உரையின் பக்கம் வருகிறேன். கடந்த இரண்டு நூற்றாண்டுகளை ஆய்வு செய்து பார்த்தால், அப்போது நடைபெற்ற போர்கள் மார்க்கப் போர்கள் அல்லவென்றும், அவை அரசியல் காரணங்களுக்காக நிகழ்த்தப்பட்ட போர்களே என்றும் நாம் அறியலாம். இன்றும் கூட நாடுகளுக்கிடையே மோதல்களும் பகைமையும் ஏற்படக் காரணம், நாடுகளை பிடிக்கும் நோக்கமும், அரசியல் பொருளாதாரக் காரணங்களுமேயாகும்.

இன்றைய நிலைமைகளை கவனத்தில் கொண்டு பார்க்கும்போது, உலக நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார சரிவுகள் ஓர் உலகப் போரை ஏற்படுத்திவிடுமோ என நான் அஞ்சுகிறேன். ஏழை நாடுகள் மட்டுமல்ல, பணக்கார நாடுகள் கூட இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, அழிவின் விளிம்பிலிருந்து மனித குலத்தை பாதுகாக்க, இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வை தேட வேண்டியது வல்லரசு நாடுகளின் கடமையாகும்.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் மீது தனது செல்வாக்கை உபயோகிக்கும் நாடுகளுள் பிரிட்டனும் ஒன்றாகும். எனவே நீங்கள் நினைத்தால், நடுநிலையுடன் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் இவ்வுலகிற்கு நீங்கள் வழிகாட்ட முடியும்.

**பிரிட்டன் பல நாடுகளை ஆட்சி செய்த சமீப கால வரலாற்றை நாம் பார்க்கும் போது, நீதியையும் மார்க்க சுதந்திரத்தை யும் நிலைநாட்டியதில் ஓர் உயர்ந்த முன்மாதிரியை பிரிட்டன் விட்டுச் சென்றிருப்பதை நாம் காண முடிகிறது.** குறிப்பாக இந்திய துணை கண்டத்தில் பிரிட்டனின் இந்த முன்மாதிரியை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் காண முடிந்தது. நீதி மற்றும் மார்க்க சுதந்திரத்தை நிலைநாட்டுவது தொடர்பான பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் விக்டோரியா மகாராணிக்கு அவரது வைரவிழாவின் போது தமது நல்வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், இஸ்லாத்தின் தூதுச் செய்திகளையும் அன்னாரிடம் கூறினார்கள்.** மேலும் பிரிட்டிஷ் அரசாங்கம் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வருவதால் அதன் மீது அருள் புரியுமாறு இறைவனிடம் பிரார்த்தனையும் செய்தார்கள்.

எனவே, பிரிட்டிஷ் அரசு நீதியை கடைப்பிடிப்பதை நாங்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்தே வந்துள்ளோம் என்பதை எமது வரலாறு தெரிவிக்கிறது. மேலும் வருங்காலத்திலும் மார்க்க விஷயங்களில் மட்டுமல்லாமல் எல்லா துறைகளிலும் நீதியை நிலை நாட்டுவதை பிரிட்டன் தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் கடந்த காலத்தில் நீங்கள்

வெளிப்படுத்திய நற்பண்பினை நீங்கள் ஒருபோதும் மறக்க மாட்டீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இன்று உலகில் ஒரு கிளர்ச்சியும் அமைதியின்மையும் தோன்றியிருப்பதை நாம் காண்கிறோம். சில பகுதிகளில் சிறிய அளவிலான போர்கள் வெடிப்பதையும், அப்பகுதிகளில் அமைதியை நிலைநாட்டி விடுவோம் என்று கூறி வல்லரசுகள் தலையிட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம். அப்பகுதிகளில் நீதியின் எதிர்பார்ப்புகளை முறையாக நிறைவேற்றாவிட்டால், இந்த சிறிய போர்களின் தீப்பிழம்புகள் பரவி முழு உலகையும் சூழ்ந்துவிடும். எனவே அழிவிலிருந்து உலகை காப்பாற்றுமாறு உங்களை நான் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

தற்போது நான், அமைதியை நிலைநாட்டுவதற்காக இஸ்லாம் கூறும் அறிவுரைகளை சுருக்கமாக எடுத்துரைப்பேன். முஸ்லிம்கள் மட்டுமல்ல, உலக நாடுகளும் அரசுகளும் அந்த அறிவுரைகளின் படி நடக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை ஆகும். முன்னெப்போதும் இல்லாத அளவில் இன்று உலகம் மிகவும் சுருங்கி ஒரு உலகளாவிய கிராமமாக (**Global Village** ஆக) மாறி விட்டது. இந்நிலையில் மனித உரிமைகளை பாதிக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விஷயத்தில் நமது பொறுப்பை நாம் உணரவேண்டும். இத்தகைய முயற்சிகள் அனைத்தும் நீதியை அடிப்படையாகக் கொண்டிருப்பது கட்டாயமாகும்.

இன்று உலகில் தோன்றியுள்ள பிரச்சனைகளுள் மார்க்கத்துடன் நேரடியாக தொடர்பில்லாத, ஆனால் மார்க்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனை உள்ளது. **சில முஸ்லிம்கள் சட்டத்திற்கு விரோதமாக தற்கொலைத் தாக்குதல்களை மார்க்கத்தின் பெயரில் நிகழ்த்தி இராணுவத்தினரையும் அப்பாவி மக்களையும் கொன்று வருகின்றனர்.** அப்பாவி முஸ்லிம்களையும் குழந்தைகளையும் கூட அவர்கள் கொடூரமாக கொன்று விடுகின்றனர். **இந்த கொடூரமான செயல்களை இஸ்லாம் அங்கீகரிக்க வில்லை.** சில முஸ்லிம்களால் நிகழ்த்தப்படும் இந்த கோரமான செயல்களின் காரணமாக முஸ்லிம் அல்லாதவர்களின் மத்தியில் இஸ்லாத்தை குறித்த தப்பெண்ணம் உருவாகியுள்ளது. சிலர் இஸ்லாத்திற்கு எதிராக வெளிப்படையாகவே பேசுகின்றனர். வேறு சிலரோ வெளிப்படையாக பேசாவிட்டாலும் தமது உள்ளத்தில் இஸ்லாத்தை குறித்த தப்பெண்ணத்தை கொண்டுள்ளனர். இவ்வாறு மேற்கத்திய நாடுகளிலும், முஸ்லிம் அல்லாத பிற நாடுகளிலும் உள்ள மக்களின் உள்ளங்களில் முஸ்லிம்களை குறித்த நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டுள்ளது. சில முஸ்லிம்களின் தவறான நடத்தையின் காரணமாக, சில சமயங்களில் முஸ்லிம் அல்லாதவர்களின் எதிர்நடவடிக்கை மிகவும் மோசமானதாகி விடுகிறது.

இதற்கு உதாரணமாக, இஸ்லாத்தின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், இஸ்லாத்தின் தூய நூலான திருக்குர்ஆன் மீதும் செய்யப்பட்ட தாக்குதல்களை கூறலாம். இந்த விஷயத்தில் **சில நாடுகளின் அரசியல்வாதிகள் நடந்து கொண்டதைப் போன்று பிரிட்டிஷ் அரசியல்வாதிகளில் எவரும் - அவர் எந்தக் கட்சியை சார்ந்தவர்களாக இருந்த போதிலும், நடந்து கொள்ளவில்லை** என்பது குறிப்பிடத்தக்கது. நான் அதற்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற மக்களின் உணர்வுகளை காயப்படுத்துவதால் வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் அதிகமாகுமே தவிர, வேறென்ன நற்பலன் அதனால் கிடைக்கப் போகிறது? இந்த வெறுப்பு சில பயங்கரவாத முஸ்லிம்களை இஸ்லாத்

திற்கு விரோதமான செயல்களை செய்யும்படி தூண்டி வருகிறது. இதனால் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்திற்கு எதிரான தமது குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்த மேலும் வாய்ப்பு கிடைத்து விடுகிறது. எனினும் பயங்கரவாத சிந்தனை இல்லாத முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஆழமாக நேசிக்கின்ற முஸ்லிம்கள் (இஸ்லாத்தின் தூதர் மீது செய்யப்படும்) இந்த தாக்குதல்களால் மிகவும் காயப்படுத்தப் படுகின்றனர். இதில் முதலிடம் வகிப்பது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான நற்பண்பினையும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் உலகின் முன் எடுத்து வைப்பதே எங்களது மிக முக்கியமான கடமையாகும். நாங்கள் எல்லா நபிமார்களுக்கும் (அவர்கள் அனைவர் மீதும் இறைவனின் சாந்தி உண்டாவதாக!) மதிப்பளிக்கின்றோம். அவர்கள் அனைவரும் இறைவனால் அனுப்பப்பட்ட இறைதூதர்கள் என நம்புகிறோம். நாங்கள் அவர்களுள் எவரைக் குறித்தும் மரியாதைக் குறைவாக எதுவும் பேசுவதில்லை. ஆனால் எங்களது இறைதூதர் மீது அடிப்படையற்ற உண்மையற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறும் போது நாங்கள் மிகவும் துன்பமடைகிறோம்.

இன்று உலகம் மீண்டும் பல அணிகளாக பிரிந்து வருகிறது. பயங்கரவாதம் அதிகரித்து வருகிறது. பொருளாதார நிலைமை மோசமாகி வருகிறது. எல்லாவித வெறுப்புகளையும் களைந்து அமைதிக்கு அடித்தளமிட வேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளது. இது ஒருவருக்கொருவர் எல்லா வகையான உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பதன் மூலமே நடைபெற முடியும். இதனை நேர்மையுடன் முறையாக செய்யாவிட்டால், நிலைமை மோசமாகி கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகள் உருவாகிவிடும். **பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள நாடுகள் பின்தங்கியுள்ள நாடுகளை சேர்ந்த மக்களை தமது நாடுகளில் குடியேற அனுமதித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அவர்களில் பெரும்பாலார் முஸ்லிம்களாகவும் உள்ளனர்.** உண்மையான நீதியின் எதிர்ப்பார்ப்பு என்னவெனில், இந்த மக்களின் உணர்வுகளுக்கும் மார்க்க சிந்தனைகளுக்கும் கூட மதிப்பளிக்க வேண்டும் என்பதாகும். இதன் மூலமாகவே மன அமைதியை நிலை நிறுத்த முடியும். மக்களின் மன அமைதி சேதப்பட்டால் சமுதாய அமைதி கெட்டுவிடும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நான் ஏற்கனவே கூறியபடி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் எனது நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவர்கள் இஸ்லாத்தில் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்கின்றனர். உண்மையில் இது திருக்குர்ஆன் கற்றுத்தரும் போதனையாகும்.

''மார்க்கத்தில் எந்த பலவந்தமுமில்லை'' என திருக்குர்ஆன் கூறுகிறது. திருக்குர்ஆனின் இந்த அறிவுரை இஸ்லாம் வாளினால் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டிற்கு மறுப்பு மட்டுமல்ல; மாறாக, **மார்க்கத்தை ஏற்றுக் கொள்வது மனிதனுக்கும் இறைவனுக்குமிடையேயான விஷயமாகும். அதில் நீங்கள் தலையிடக் கூடாது என்ற அறிவுரையும் முஸ்லிம்களிடம் தரப்படுகிறது.** ஒவ்வொருவரும் தமது நம்பிக்கைக் கேற்ப வாழலாம்; மார்க்க சட்டங்களை பின்பற்றலாம். எனினும் மார்க்கத்தின் பெயரில் செய்யப்படும் ஏதாவது ஒரு செயல் பிறருக்கு துன்பம் தரக் கூடியதாகவோ அல்லது நாட்டின் சட்டத்திற்கு எதிராகவோ இருப்பின், அதற்கெதிராக அந்த நாடு சட்டபடி நடவடிக்கை எடுக்க முடியும். ஏனெனில் ஒரு கொடுஞ்செயல் அந்த மார்க்கத்தின் பெயரில் செய்யப்பட்டாலும் அது எந்த ஒரு இறைதூதராலும் போதிக்கப்பட்டிருக்க முடியாது. இதுவே அமைதியை நிலைநாட்டுவதற்கான அடிப்

படை விதியாகும். இந்த விதியை நாட்டிற் குள்ளும் சர்வதேச அளவிலும் பயன்படுத்த முடியும்.

மேலும் இஸ்லாம் எங்களுக்கு கற்றுத்தருவது என்னவெனில் ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக, ஒரு சமுதாயமோ, ஓர் அமைப்போ அல்லது ஓர் அரசோ அநீதியுடன் உங்களது மார்க்க விஷயத்தில் தலையிட்டு, பின்னர் நிலைமை மாறிவிட்டால் பிறகு அதற்கெதிராக நீங்கள் காழ்ப்புணர்ச்சியோ, தீய எண்ணமோ ஒருபோதும் கொள்ளக்கூடாது. நீங்கள் பழிவாங்கும் எண்ணம் கொள்ளக்கூடாது. மாறாக நீதியை நிலைநாட்டவேண்டும். திருக்குர்ஆன் கூறுகிறது: 'நம்பிக்கை கொண்டவர்களே! மார்க்க விஷயத்தில் உறுதியாக நில்லுங்கள். **ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடப்பதை விட்டும் தடுக்கவேண்டாம்.** எப்போதும் நீதியுடன் நடந்து கொள்வதே இறையச்சத்திற்கு நெருக்கமானதாகும். இறைவனுக்கு அஞ்சுங்கள் அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிபவ னாவான். (5:9) இதுவே சமுதா யத்தில் அமைதி யினை நிலைநாட்டுவதற்கான போதனை யாகும். உங்களது எதிரிகளின் விஷயத்தில் கூட நீதியை விட்டு ஒரு போதும் விலகி விடாதீர்கள்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் இந்த போதனை பின்பற்றப்பட்டதையும் நீதியின் எல்லா எதிர்பார்ப்புகளும் நிறைவு செய்யப்பட்டதையும் காணலாம். அதற்கான பல எடுத்துக்காட்டுகளை தற்போது நான் கூறமுடியாவிட்டாலும் வரலாறு தரும் சாட்சி என்னவெனில், மக்கா வெற்றியின் போது **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது எதிரிகளிடம் பழிவாங்காமல் அவர்களை மன்னித்தது மட்டுமல்லாமல் அவர்களை தத்தமது மார்க்கத்திலேயே தொடர்ந்து வாழ்வதற்கு அனுமதி வழங்கினார்கள்.** இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போர்களில் மட்டுமல்லாமல், எல்லா போர்களிலுமே நீதியின் எல்லா எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்தால் மட்டுமே அமைதியை உலகில் நிலைநாட்ட முடியும். இத்தகைய அமைதியே நிலைத்து நிற்கக் கூடியதாகும்.

கடந்த நூற்றாண்டில் இரண்டு உலகப்போர்கள் நிகழ்ந்தன. அதற்கான காரணிகள் எதுவாக இருந்தபோதிலும், நீங்கள் ஆழமாகப் பார்க்கும் போது ஒரே ஒரு காரணி மட்டுமே மிகைத்து நிற்பதைக் காணலாம். அது என்னவெனில், ஆரம்பத்திலேயே நீதி முறையாக செயல்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக அணைக்கப்பட்டதாகக் கருதப் பட்ட நெருப்பு, உண்மையில் மெதுவாக எரிந்து கொண்டேதான் இருந்தது. பின்னர் திடீரென தீப்பிழம்புகளை நீட்டி முழு உலகையும் அது சூழ்ந்து கொண்டது. இன்று உலகில் அமைதியின்மை அதிகரித்து வருகிறது. நடைபெற்று வரும் போர்களும், அமைதியை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளும் மற்றொரு உலகப்போருக்கு முன்னோடிகளாக உள்ளன. மேலும் பொருளா தார நெருக்கடியும், சமுதாயப் பிரச்சனைகளும் நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளன.

திருக்குர்ஆன் உலகில் அமைதியை நிலைநாட்ட அழகான போதனைகளைத் தருகிறது. பேராசை, பகைமையை வளர்க்கிறது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். இது சிலசமயம் நாடுகளை விரிவுபடுத்துவதன் மூலமோ அல்லது இயற்கை வளங்களை அபகரிப்பதன் மூலமோ அல்லது பிறர்மீது ஆதிக்கத்தை செலுத்துவதன் மூலமோ வெளிப்படுகிறது. இது அநீதிக்கு இட்டுச் செல்கிறது. இந்த அநீதியானது தமது சுய நோக்கங்களுக்காக குடிமக்களின் உரிமைகளை பறித்தவாறு அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் சர்வாதிகார ஆட்சியாளர்களால் இழைக்கப்படலாம் அல்லது படையெடுத்து

ஆக்கிரமிப்பு செய்யும் அந்நிய சக்தியின் மூலம் இழைக்கப்படலாம். எவ்வாறிருப்பினும், இவ்வாறு அநீதிக்கு ஆளான மக்களின் அழுகுரல் சில சமயம் வெளி உலகிற்கும் கேட்கவே செய்கிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஒரு போதனையை கற்றுத் தந்துள்ளார்கள். அது என்னவெனில், நீங்கள் அநீதி இழைக்கப்பட்டவருக்கும், அநீதி இழைப்பவருக்கும் உதவி செய்யுங்கள் என்பதாகும். அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவி செய்தலை எங்களால் புரிய முடிகிறது; ஆனால் அநீதி இழைப்பவருக்கும் உதவுதல் என்பதன் பொருள் என்ன? என்று நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது, அவரது கைகளை அநீதியை விட்டும் தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள் எனக் கூறினார்கள். ஏனெனில் அநீதியில் எல்லை மீறிச் செல்லும்போது அவர் இறை தண்டனைக்கு ஆளாகிவிடுவார். எனவே கருணை கொண்டு அவரை காப்பாற்ற முயற்சி செய்யுங்கள். இந்த போதனையை நாம் சமுதாயத்தின் சிறு அமைப்புகளில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் செயல்படுத்த முடியும்.

இது தொடர்பாக திருக்குர்ஆன் கூறுகிறது. நம்பிக்கை கொண்ட இரு சாரார் தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டால், அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துங்கள். பிறகு அவர்களில் ஒரு பிரிவினர் வரம்பு மீறினால், அவர்கள் இறைவனின் கட்டளை பக்கம் திரும்பும் வரை அதன் மீது போர் புரியுங்கள். அவர்கள் திரும்பி விட்டால் அவர்களுக் கிடையில் நீதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுங்கள். அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கின்றான். *(49:10)*

இந்த போதனை குறிப்பாக முஸ்லிம்களுக்கு தரப்பட்டிருப்பினும், உலக அளவில் அமைதியை நிலைநாட்ட இதனை அடிப்படையாக கொள்ளலாம். அமைதியை நிலைநாட்ட முதல் தேவையாக குறிப்பிடப் பட்டுள்ளது நீதியாகும். அமைதியை நிலைநாட்ட நீதியுடன் செய்யப்படும் முயற்சிகளில் வெற்றி கிடைக்காவிடில், வரம்பு மீறும் பிரிவு சமாதானத்திற்கு இணங்கிவிட்டால் பின்னர் அதனை பழி வாங்கக் கூடாது. அதன் மீது தடைகளையோ அல்லது பொருளாதார நிர்பந்தங்களையோ திணிக்கக் கூடாது. வரம்பு மீறியவர் மீது எப்போதும் ஒரு கண் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதே நேரத்தில் அவரது நிலையை மேம்படுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

இன்று உலகில் சில நாடுகளில் அமைதியின்மை காணப்படுகிறது. அவற்றுள் குறிப்பாக சில முஸ்லிம் நாடுகளும் இருக்கின்றன. **அந்த நாடுகளில் நீதி முறையாக செயல்படுத்தப்படுகின்றதா என்பதை குறிப்பாக வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகள் அலசிப்பார்க்க வேண்டும்.** ஏனெனில் உதவி தேவைப்படும் போது சக்தி வாய்ந்த நாடுகளிடமே கை நீட்டப்படுகிறது.

நான் ஏற்கனவே கூறியபடி, பிரிட்டிஷ் அரசாங்கம் நீதியை எப்போதும் நிலைநாட்டி வந்திருப்பதற்கு நாம் சாட்சியாவோம். இதுவே உங்களை இவ்விஷயத்தின் பக்கம் திருப்புவதற்கு என்னை தூண்டியது.

அமைதியை நிலைநாட்ட எங்களுக்கு கற்றுத் தரப்பட்டிருக்கும் மற்றொரு போதனை என்னவெனில், பிறரது செல்வத்தை பேராசையுடன் பார்க்கக்கூடாது என்பதாகும். நாம் அவர்களில் சிலருக்கு சிறிது காலத்திற்காக வழங்கியுள்ள பொருட்களின் பக்கம் உமது கண்களை திருப்பாதீர். இவ்வுலக அலங்காரத்தைக் கொண்டு நாம் அவர்களை சோதிக்கின்றோம் என திருக்குர்ஆன் கூறுகிறது. *(20:132)* செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக பேராசை கொள்வது உலகில்

அமைதியின்மை தோன்ற காரணமாகி விடுகிறது. தனிப்பட்ட அளவில் பேராசை கொண்டு போட்டி போடுவது சமுதாய அமைதி கெடுவதற்கு காரணமாகிவிடுகிறது. தேசிய அளவில் பேராசை கொண்டு போட்டியில் இறங்குவது உலக அமைதியை சீர்குலைத்து விடுகிறது. இது வரலாற்றின் மூலம் நிரூபிக்கப்பட்டதாகும். பிறரது செல்வத்தை விரும்புவது பொறாமை யையும் பேராசை யையும் தோற்றுவித்து அமைதியை குலைத்து விடும் என்பதை அறிவுள்ள எவரும் புரியமுடியும்.

எனவேதான் திருக்குர்ஆன் ஒருவர் தனது வாழ்வாதார பொருட்களையே பார்க்க வேண்டும் என்றும் அவற்றிலிருந்து பலன் பெற முயற்சி செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. இன்று பிற நாட்டின் இயற்கை வளங்களிலிருந்து பயன்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக கூட்டணியும் உருவாக்கப்படுகிறது. இது தொடர்பாக, சில நாடுகளின் அரசாங்க ஆலோசகர்களாக பணிபுரிந்த சிலர், பின்னர் எழுதிய தமது நூற்களில் எவ்வாறெல்லாம் அந்த நாடு பிற நாடுகளின் வளங்களை அபகரித்துக் கொள்ள திட்டங்களை மேற்கொண்டது என்பதை பற்றி விவரிக்கின் றனர். அவர்கள் தரும் தகவல்கள் எந்த அளவு உண்மையானவை என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆனால் இத்தகைய விபரங்களை படிப்பதனால் ஏழை நாடுகளைச் சேர்ந்த நாட்டுப் பற்று மிக்கவர்களின் உள்ளங்களில் பெரும்துயரம் ஏற்படுகிறது.

இன்றைய உலகம் கடந்தகாலத்தை விட கல்வியறிவில் முன்னேறி இருப்பதாக தன்னை கருதுகிறது. ஏழை நாடுகளில் கூட தத்தமது துறைகளில் மிகச் சிறந்த அறிஞர்கள் உள்ளனர். அவர்கள் உலகின் மிகப் பெரிய ஆராய்ச்சி மையங்களுடன் இணைந்து பணியாற்று கின்றனர். இத்தகைய சூழ்நிலையில், கடந்த காலத்தில் கடும் பகையை உருவாக்கி பயங்கரமான போர்களுக்கு இட்டுச் சென்ற தவறான வழிகளைவிட்டும் தப்பித்து கொள்வதற்காக மக்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இறைவன் வழங்கியுள்ள அறிவையும் விஞ்ஞான முன்னேற்றத்தையும் மனித குலத்தின் நன்மைக்காகவும், ஒருவர் மற்றவரது வளங்களிலிருந்து ஆகுமான முறையில் பலன் பெறவும் பயன்படுத்த வேண்டும். இறைவன் ஒவ்வொரு நாட்டிற்கும் இயற்கை வளங்களை வழங்கியுள்ளான். அவற்றை பயன்படுத்துவன் மூலம் இவ்வுலகை அமைதியின் சுவர்க்கமாக மாற்ற முடியும். இறைவன் பல நாடுகளுக்கு பலவகையான பயிர்களை விளைவிப்பதற்கான தகுந்த இயற்கை சூழலையும், தட்ப வெப்ப நிலையையும் வழங்கியுள்ளான். நவீன தொழில் நுட்பங்களை விவசாயத் துறையில் பயன்படுத்துவதற்கு முறையான திட்டங்களை மனிதன் மேற்கொண்டிருந்தால், அதன் மூலம் பொருளாதாரம் வலுப்பெற்றிருக்கும்; உலகிலிருந்து பசி, பட்டினி அகற்றப்பட்டிருக் கும். எந்த நாடுகளில் கனிம வளங்கள் உள்ளனவோ அவை அவற்றை நியாய விலையில் வெளிப்படையான வணிகம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். ஒரு நாடு பிற நாட்டின் வளங்களிலிருந்து பலன் பெற வேண்டும். இதுவே இறைவன் விரும்புகின்ற நடைமுறையாகும். இறைவன் தனது தூதர்களை மக்களிடம் அனுப்புவதன் நோக்கம், அவர்கள் மக்களுக்கு இறைவனை அடையும் வழியை காண்பிக்க வேண்டும் என்பதாகும். அதே நேரத்தில் மார்க்க விஷயத்தில் முழுமையான சுதந்திரம் இருப்பதாகவும் இறைவன் கூறுகிறான். எங்களது நம்பிக்கைபடி நற்கூலியும் தண்டனையும் மரணத்திற்கு பின்னர்தான் என்ற போதிலும், இறைவன் படைத்திருக்கும் அமைப்பின் கீழ், மனிதன் எப்போது அவனது படைப்பின் மீது அநீதியையும் நன்னடத்தையையும் அலட்சியப்

படுத்துவானோ அப்போது அதன் எதிர்விளைவை இயற்கை விதிகளின் மூலம் இவ்வுலகிலும் அவன் கண்டு கொள்வான். அநீதிகளுக்கு எதிரான கடுமையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் நாம் கண்டு வருகிறோம். அந்த எதிர் நடவடிக்கைகள் சரியானவையா அல்லது தவறானவையா என்ற உத்திரவாதம் தர முடியாது. உண்மையில் உலகை வெல்வதற்கான ஒரேவழி ஏழை நாடுகளுக்கு அவற்றிற்குரிய அந்தஸ்தை வழங்குவதே ஆகும்.

இப்போது உலகில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடியை 'கடன் சிக்கல்' என்று கூறுகின்றனர். இதற்கான காரணி ஒன்றுதான். வியப்பாகவே தோன்றினாலும் திருக்குர்ஆன் கூறும் கட்டளை வட்டியை விட்டு விலகுங்கள் என்பதாகும். வட்டி எப்படிப்பட்ட ஒரு சாபம் எனில் அதன் காரணமாக குடும்ப அமைதியும், தேசிய அமைதியும், உலகளாவிய அமைதியும் ஆபத்திற்கு உள்ளாகின்றன. வட்டியை விழுங்குபவர் ஷைத்தானால் மடமையைக் கொண்டு பீடிக்கப்பட்ட ஒருவரைப் போன்றவராவார் (2:276) என நாங்கள் எச்சரிக்கப்பட்டுள்ளோம். இந்த நிலையை தவிர்ப்பதற்காக வட்டியை பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்ளுங்கள். வட்டியின் மூலமாக பணம் வளர்வதைப் போல் தோன்றுகிறது. ஆனால் அவ்வாறில்லை. அதன் உண்மையான விளைவுகள் வெளிப்படும் ஒரு காலம் வந்தே விடுகிறது. மேலும் நீங்கள் அதில் ஈடுபட்டால் அது இறைவனுக்கு எதிரான ஒரு போர் ஆகும் என்றும் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். ஆரம்பத்தில் தனிநபர்கள் சொத்து வாங்குவதற்காக வட்டிக்கு கடன் வாங்கினர். ஆனால் அந்த சொத்தின் உரிமைக்காரராக ஆவதற்கு முன்பே கடன் சுமையுடனே மரணித்தனர். தற்போது அரசுகள் இவ்வாறு கடன் சுமையால் பாதிக்கப்பட்டு மடமையால் பீடிக்கப்பட்டவைப் போன்றுள்ளன. பெரிய நிறுவனங்கள் திவாலாகி வருகின்றன. சில வங்கிகளும், நிதி நிறுவனங்களும் செயலற்றுவிட்டன. இந்த நிலை ஒவ்வொரு பணக்கார நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியை குறித்து என்னைவிட உங்களுக்கு நன்கு தெரியும். (முதலீடு செய்தவர்களின் பணம் ரத்து செய்யப்படுகிறது) தற்போது அவற்றை எவ்வாறு காப்பாற்றுவது என்பது அந்த அந்த அரசுகளைப் பொறுத்ததாகும். ஆனால் இன்று சில நாடுகளில் குடும்பங்களும், வியாபாரிகளும், அரசாங்க தலைவர்களும் இதன் காரணமாக அமைதியை இழந்து விட்டனர். இந்நிலை குறித்து ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்நிலை எதிர்காலத்தில் இன்னும் என்னென்ன விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதை இறைவனே நன்கறிவான்.

இறைவன் அமைதியின் பக்கம் அழைக்கிறான். அதற்கு உத்திரவாதம் தூய வணிகத்திலும் இயற்கை வளங்களை முறையாகவும் நீதியுடனும் பயன்படுத்துவதிலும் இருக்கிறது.

இப்போது நான் இந்த உரையை முடித்துக் கொள்கிறேன். இறைவன் பக்கம் திரும்புவதிலேயே உலக அமைதி உள்ளது என்பதை உங்களுக்கு நினைவூட்டிக் கொள்கிறேன். இறைவன் இந்த கருத்தை உலகம் அறிந்து கொள்ளச் செய்வானாக! அப்போதுதான் பிறருக்குரிய உரிமைகளை அவர்களால் முறையாக நிறைவேற்ற முடியும். இறுதியாக, இங்கு வந்து எனது உரையை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழில்:**

**A. நாஸிர் அஹ்மத்**

# சிறுவர் பகுதி

துல் ஹஜ் 9ஆம் நாள், அதிகாலையில் மினாவிலிருந்து, மஷ்ஹரல் ஹராம் சென்று அங்கிருந்து அரஃபாத் எனும் வெட்ட வெளியான இடத்திற்குச் சென்றடையும் முன் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஒன்றாக நிறைவேற்ற வேண்டும். ஹஜ் பயணிகள் அனைவரும் அரஃபாத்தை அடைந்த பிறகு, இமாம் உரை நிகழ்த்துவார். அவ்வேளையில் அனைவரும் துஆவுடன் அமைதியாக நிற்க வேண்டும். அதன் பிறகு சூரியன் மறைந்தவுடன் அங்கிருந்து புறப்பட்டு முஸ்தலிஃபா அல்லது மஷ்ஹரல் ஹராம் திரும்ப வேண்டும். அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஒன்றாக நிறைவேற்றி, அமைதியாக திக்ரிலும், துஆவிலும் ஈடுபட்டவர்களாக இருக்க வேண்டும்.

அடுத்த நாள், அதாவது துல்ஹஜ் பத்தாம் நாள், ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு மஷ்ஹரல் ஹராமிலிருந்து புறப்பட்டு மினாவிற்கு வந்து அங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மூன்று தூண்களில் கல்லெறிய வேண்டும். ஜம்ராத்தல் அக்காபா எனும் இடத்திலிருந்து இந்த தூண்கள் ஆரம்பமாகும். கல்லெறியும்போது ஏழு கற்களை ஒவ்வொரு கற்களாக ஏழு முறை எறிய வேண்டும். மினாவில் இருக்கின்றவரை தினமும் ஏழு கற்களை அந்த இடத்தில் எறியவேண்டும். அன்றைய தினமே, அதாவது துல்ஹஜ் பத்தாம் நாள் ஹஜ்பயணிகள் தாம் கொண்டு வந்துள்ள குர்பானிகளை நிறைவேற்ற வேண்டும். தாம் கொண்டுவந்துள்ள கால்நடைகளை அதாவது ஆடு, செம்மறி ஆடு, பசு, ஒட்டகம் போன்றவற்றை அறுத்து பலியிட வேண்டும். அதன் பிறகு தலைமுடியை சிரைத்து நன்றாக நீராடி, தமது சாதாரண உடைகளை அணிந்து மக்காவிற்கு செல்ல வேண்டும். அங்கு கஅபத்துல்லாஹ்வை ஏழுமுறை வலம் வரவேண்டும். ஒருவர் விருப்பப்பட்டால் திரும்பவும் மினாவிற்கு வரலாம். மினாவில் ஒரு நாளோ, அல்லது மூன்று அல்லது நான்கு நாட்கள் தங்கலாம். இவ்வாறு மினாவில் செலவிடும் நாட்கள் அய்யாமம் மஃதூதாத் என கூறப்படுகிறது. இத்துடன் ஹஜ் நிறைவேறுகிறது. இந்த அனைத்து நாட்களிலும், எல்லா தருணத்திலும் ஹஜ்ஜின் போது ஓதவேண்டிய மேற்கூறிய துஆவை ஓதி வரவேண்டும்.

இத்துடன் ஹஜ் எனும் புனிதப் பயணக் கடமை நிறைவேறுகிறது. ஹஜ்ஜிற்குரிய குறிப்பிட்ட நாட்களில் மக்காவிற்கு செல்ல முடியாதவர்கள் ‘உம்ரா’ எனும் சிறு புனித பயணத்தை மேற்கொள்ளலாம். ஹஜ்ஜின் போது செய்ய வேண்டிய அனைத்து காரியங்களையும் உம்ராவின் போது செய்ய வேண்டும். அதாவது, இஹ்ராம் எனும் நிலையில் கஅபாவை ஏழு முறை சுற்றி வரவேண்டும். சஃபா மர்வாவிற்கு இடையில் ஏழுமுறை விரைவாகச் சென்று, தமது குர்பானியை நிறைவேற்ற வேண்டும். குர்பானி கொடுப்பது உம்ராவின் போது கட்டாயமில்லை.

உம்ரா எனும் சிறு புனித பயணத்தை ஆண்டில் எந்த நாட்களிலும் நிறைவேற்றலாம். ‘ஹஜ்’ எனும் புனித பயணம் ‘துல் ஹஜ்’ மாதத்தில் குறிப்பிட்ட நாட்களில்தான் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு, நாம் சிறுவர் பகுதியில் இஸ்லாத்தின் ஐந்து தூண்களான கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத் மற்றும் ஹஜ் எனும் புனித பயணத்தின் கடமைகளைப் பற்றி படித்தோம். அடுத்து ஏழு விதமான நம்பிக்கைகளைப் பற்றி பார்ப்போம்.

ஒரு நம்பிக்கையாளர் ஏழு விஷயத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ள

வேண்டும். அவனது மார்க்கங்களின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவனால் இறக்கப்பட்ட வேதநூல்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவனால் அனுப்பப் பட்ட நபிமார்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். நன்மையும், தீமையும் இறைவன் நாட்டப்படியே நடக்கிறது என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நாம் இப்போது கூறிய ஏழுவிதமான விஷயங்கள் மீது ஏன் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த ஏழு விஷயங்களும் மறைவானவையாக இருக்கின்றன. இதனைப் பற்றி திருக்குர்ஆனின் 2வது அதிகாரமான அல்பகராவின் 4வது வசனத்தில் இறையச்சமுடையவர்களின் பண்புகளில் ஒன்றாக, அவர்கள் மறைவான வற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள்; தொழுகையினை தொடர்ந்து நிலை நாட்டுவார் கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்து கொண்டிருப்பார்கள் எனக் கூறுகிறது.

மறைவானவை, நமது கண்ணுக்கும், மற்ற புலன்களுக்கும் நேரடியாக புலப்படாதவை. எனவே, அவற்றினை இறையுதவியினால் அன்றி நம்மால் அறிய முடியாது. அதே வேளையில், தமது ஆற்றலால், மேற்கூறிய மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ள இயலாது. நம்பிக்கை என்பது பணிவு, அன்பு, நேசம் இவற்றுடன் தொடர்புடையதாகவுள்ளது. கர்வம், அகங்காரம், தான் என்ற அகம்பாவம் கொண்டவர்கள் நம்பிக்கை கொள்ளயியலாது. இதற்கான சான்றுகள் திருக்குர்ஆனில் பல இடங்களில் பல வரலாற்றுச் சம்பவங்களாக காணப்படு கின்றன. நம்பிக்கை கொண்டவர் களுக்கு இறைவன் வழங்கிய, வழங்க விருக்கின்ற வெகுமதிகளைப் பற்றியும், நிராகரிப்பவர்களுக்கு உலகம் தோன்றிய நாள் முதல் வழங்கங்கப்பட்ட இறைவனது தண்டனைகளும், அழிவுகளும் ஒரு பாடமாக திருக்குர்ஆனில் அல்லாஹ் பதிவு செய்திருக்கின்றான்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கையாளர்களாகத் திகழ இறைவன் கூறும் ஏழுவிதமான மறைவானவற்றின் மீதும் முழுமையாக நம்பிக்கை வைப்பது அவசியமாகும். எனவே, இந்த ஏழுவிதமான நம்பிக்கைகளைப் பற்றி அடுத்து விரிவாகப் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ். (தொடரும்)

**M. நயீம் அஹ்மத்**

### சென்னை இளைஞர் அணி சார்பாக

## இலவச பல் சிகிச்சை முகாம்

சென்னை குத்தாமுல் அஹ்மதிய்யா (இளைஞர் அணி) சார்பாக 12-10-08 அன்று அஹ்மதிய்யா முஸ்லிம் கொள்கை பரப்பு நிலையத்தில் இலவச பல் சிகிச்சை முகாம் நடைபெற்றது. மீனாட்சி அம்மாள் பல் மருத்துவமனையிலிருந்து 17 பல் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இலவச பல் சிகிச்சை முகாம், வட மண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது அவர்களின் துஆவுடன் ஆரம்பமானது. அன்று மழையாக இருந்த போதிலும் 143 நோயாளிகள் வந்து இலவச மருத்துவம் பெற்றனர். மருந்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

இதில் சென்னை குத்தாம் சகோதரர்களும், பெண்கள் பகுதியில் லஜ்னா (மகளிர்) பிரிவினரும் தொண்டாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். அல்லாஹ் அதற்கான நற்கூலியை அனைவருக்கும் வழங்குவானாக.

**ஹிலால் அஹ்மத் நவ்ஜவான்**
**காயித்-குத்தாமுல் அஹ்மதிய்யா, சென்னை**

# காதியான் ஆண்டு மாநாடு

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.**

அல்லாஹ்வின் அருளால் வரும் டிசம்பர் மாதம் 26,27,28,29 (வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள்) ஆகிய நான்கு நாட்களில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்தியத் தலைமையகமான காதியானில் 117வது ஆண்டு மாநாடு (ஜல்ஸா சாலானா) நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு மாநாட்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர், அமீருல் முஃமினீன், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யத ஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆண்டு மாநாடு இறைவனின் கட்டளைக்கிணங்க வாக்களிக்கப்பட்ட மஸீஹும், மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களால் 1891ம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்த மாநாட்டைப் பற்றி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''இந்த மாநாட்டை சாதாரண மாநாடுகளைப் போன்று கருதாதீர்கள். இதன் குறிக்கோள், களங்கமற்ற உண்மையை வலியுறுத்துவதும், இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவது மேயாகும். இதன் அடிக்கல்லை இறைவன் தன் சொந்தக்கரங்களால் நாட்டியுள்ளான். மேலும் இதற்காக அவன் சமுதாயங்களை தயார் செய்துள்ளான். அவை கூடிய விரைவில் இதில் வந்து சேரும். ஏனெனில் இது ஆற்றல்மிக்க இறைவனின் செயலாகும். அவனுக்கு முன்னால் சாத்தியமில்லாதது எதுவுமில்லை''.

*(இஷ்திஹார் 7, டிசம்பர் 1891)*

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முதல் ஆண்டு மாநாடு காதியானிலுள்ள மஸ்ஜித் அக்ஸாவில் நடைபெற்றது. அப்போது அதில் 75 பேர் கலந்துக்கொண்டனர். இது ஆற்றல்மிக்க இறைவனின் செயலாகும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்ட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டது போன்று, அன்னாரின் காலகட்டத்தில் 1907ம் ஆண்டு நடைபெற்ற கடைசி ஆண்டு மாநாட்டில் 2000 பேர் கலந்துக்கொண்டனர். முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் 1913ம் ஆண்டு நடைபெற்ற கடைசி ஆண்டு மாநாட்டில் 3000 பேர் கலந்துக்கொண்டனர். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் 1964ம் ஆண்டு நடைபெற்ற கடைசி ஆண்டு மாநாட்டில் ஒரு லட்சத்தை விட அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹுத்தஆலா) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் 1981ஆம் ஆண்டு நடைபெற்ற கடைசி ஆண்டு மாநாட்டில் 2 இலட்சத்தைவிட அதிகமானோர் கலந்துகொண்டனர். பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹுத்தஆ) அவர்கள் பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கு முன்பு 1983ம் ஆண்டு ரப்வாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் 2,75,000 பேர் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் பாகிஸ்தானிலிருந்து இலண்டனுக்கு ஹிஜ்ரத் சென்றதிலிருந்து தற்போது வரை அங்கு ஒவ்வோர் ஆண்டும் மாநாடு நடை பெற்று வருகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தற்போதைய ஐந்தாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலும் இலண்டனில் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் மாநாடு நடைபெற்று வருகிறது.

ஆண்டு மாநாட்டின் நோக்கத்தையும், குறிக்கோளையும் பற்றி இமாம் மஹ்தியும், வாக்களிக்கப்பட்ட மஸீஹுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''அல்லாஹ்வுக்காக இறைவனுடைய விஷயங்களை கேட்பதற்கும், துஆவில் கலந்து கொள்வதற்கும் இந்தத் தேதிகளில் முடிந்த வரை எல்லா நண்பர்களும் வந்து விடவேண்டும். ஈமானையும், உறுதியையும், இறை ஞானத்தையும் வளர்ப்பதற்குத் தேவையான உண்மைகளையும், ஞானங்களையும் கேட்பதற்கான பணி நடந்து கொண்டிருக்கும்.''

*(ஆஸ்மானி ஃபைசலா பக்கம் : 9)*

இதன்படி காதியான் ஆண்டு மாநாட்டிற்கு செல்கின்றவர்கள் ஜல்ஸா (மாநாடு) நடந்து கொண்டிருக்கும் வேளையில் சொற்பொழிவு களை கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் தமது ஈமானையும் இறை ஞானத் தையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென ஹஸ்ரத் வாக்ளிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவுறுத்தி யுள்ளார்கள்.

அவர்கள் இன்னோரிடத்தில் கூறுகிறார்கள்:

''பல அருளுக்குரிய சீர்திருத்தங்களைக் கொண்டுள்ள இந்த மாநாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்காக ஆற்றலுள்ள ஒவ்வொரு வரும் கண்டிப்பாக வரவேண்டும். மேலும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் வழியில் சின்னச்சின்ன கஷ்டங்களைப் பொருட்படுத்தாதீர்கள். இறைவன் தூயவர் களுக்கு ஒவ்வோர் அடியிலும் நற்கூலி வழங்குகிறான். மேலும் அவனுடைய வழியில் செய்யப்படும் எந்தவோர் உழைப்பும், கஷ்டமும் வீண்போவதில்லை''

*(இஷ்திஹார் 7, டிசம்பர் 1891)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுப்படி, மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காதியான் செல்ல வசதி படைத்தவர்கள் கண்டிப்பாக சென்று பயன்பெற வேண்டும்.

காதியான் செல்வதன் முக்கியத்துவத்தை விளக்கும்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''நஃப்ஸை தூய்மைப்படுத்துவற்கு இன்னொரு பெரியவழிமுறை இருக்கிறது. அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் சரியானது என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். எவர் காதியான் வருவதில்லையோ அல்லது குறைந்தபட்சம் இடம்பெயர்ந்து வர ஆசைப்படுவதில்லையோ அவருடைய ஈமான் சரியானதுதானா என்பதைப் பற்றி சந்தேகம்தான் (தர்யாக்குல் குலூப் பக்கம் 60). மன்னர்கள் உமது ஆடையிலிருந்து, அருள்களைத் தேடுவார்கள் என அல்லாஹ் இமாம் மஹ்திக்கு வாக்குறுதியளித்திருக்கும் போது அவர் பிறந்த ஊரும், எந்தபூமியில் அவர் நடந்து கொன்டிருந்தாரோ, அவர் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறரோ அங்கு அருள் இருக்காதா என்ன?....... **வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இடங்களை பார்ப்பதனால் ஓர் உருக்கம் உருவாகிறது. துஆவிற்கான தூண்டுதல் உருவாகிறது. எனவே காதியானுக்கு அதிகமாக வரவேண்டும்.''**

*(மன்ஸபே கிலாஃபத் பக்கம் : 37)*

அடுத்து, புதிதாக இந்த ஜமாஅத்தில் இணைந்தவர்கள் ஒருவரையொருவர் அறிமுகமாகிக் கொள்வதும், சகோதரர்களுக்கு மத்தியில் இருக்கின்ற வெறுப்பு, பகைமை ஆகியவற்றை நீக்குவதும் இந்த மாநாட்டின் குறிக்கோளாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

''இந்த மாநாடுகளின் தற்காலிகமான ஒரு பயன் என்னவெனில், ஒவ்வொரு புதிய ஆண்டிலும் எந்த அளவுக்கு புதிய சகோதரர்கள் இந்த ஜமா அத்தில் இணைவார்களோ அவர்கள் குறிப்பிட்ட தேதிகளில் வந்து தமது முந்தைய

சகோதரர்களின் முகங்களைப் பார்த்துக் கொள்வார்கள்... எல்லா சகோதரர்களையும் ஆன்மீகமான முறையில் ஒன்று படுத்து வதற்காகவும், அவர்களுடைய வெறுப்பு, அந்நியத்தன்மை, நயவஞ்சகம் ஆகியவற்றை இடையிலிருந்து நீக்குவதற்காகவும் இறைவன் முன்னிலையில் முயற்சி செய்யப்படும். மேலும் இந்த ஆன்மீக மாநாட்டில் இன்னும் பல ஆன்மீக பயன்கள், இலாபங்கள் இருக்கின்றன. அவை அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ்.''

*(ஆஸ்மானி ஃபைசலா பக்கம் : 9,10)*

கடந்த 1991-ம் ஆண்டு காதியான் (1891 - 1991) ஆண்டு மாநாடு தனது நூற்றாண்டை எட்டியது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நான்காவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹுத்த ஆலா) அவர்கள் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார்கள். பஞ்சாப் மாநிலத்தில் அப்போது காணப்பட்ட தீவிரவாதம் அனைவரும் அறிந்ததே. அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

''**இறைவன் இந்தியாவுக்கு சாந்தியை வழங்குவனாக.** இந்தியாவின் வடக்கிலும், தெற்கிலும் வெறுப்புகள் தூண்டடப்படுகின்றன. இந்திய சகோதரர் ஒருவர் தமது இன்னொரு சகோதரரின் இரத்தத்தைக் குடிக்க தாகமுடையவராக இருக்கின்றார். இந்தக் காட்டு மிராண்டித்தனத்தை அல்லாஹ் தன் அருளால் நீக்குவானாக. **முழு இந்தியாவும் மனித நேயத்தின் உயர்ந்த பண்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக,** இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள், மற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அவர்களின் மார்க்கங்களில் வேறுபாடு இருந்தபோதிலும் ஒருவரை யொருவர் நேசிப்பதற்கான, ஒருவரையொருவர் மதிப்பதற்கான நல்வாய்ப் பை இறைவன் வழங்குவனாக. **எந்தவொரு உண்மையான மார்க்கமும் இறையடியார் களை வெறுக்குமாறு போதிக்கவில்லை.** மாறாக, இறைவனுடைய பெரியார்களுடன் அன்பு டனும், பரிவுடனும் நடந்து கொள்ளு மாறு போதிக்கின்றது. இதுவே மார்க்கத்தின் உண்மைக்கு அடையாளமாகும். இது, இந்தியர் அனைவரின் உள்ளத்திலும் குடி கொண்டிருக்க வேண்டும். மேலும் படைப்பினங்களை நேசிக்காதவர் படைத்தவனையும் நேசிக்க மாட்டார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.''

*(காதியான் ஜல்ஸா உரை 1991)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்பவர் களுக்காக பின்வருமாறு துஆ செய்திருக்கிறார்கள்:

''அல்லாஹ்வுக்காக இருக்கும் இந்த மாநாட்டிற்காக பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொருவருடனும் இறைவன் இருப்பானாக. அவர்களுக்கு மகத்தான நற்கூலியை வழங்குவானாக. அவர்கள் மீது கருணை புரிவானாக. அவர்களின் கஷ்டங்களையும், துயரங்களையும் இலேசாக்குவானாக. அவர்களின் கவலைகளையும், துக்கங்களையும் நீக்குவானாக. ஒவ்வொரு துன்பங்களிலிருந்தும் அவர்களுக்கு விடுதலையளிப்பானாக. அவர்களின் குறிக்கோள்களுக்கான வழிகளை அவர்களுக்கு திறந்து கொடுப்பானாக. எவர்கள் மீது தனது அருளும், கருணையும் இருக்குமோ, அத்தகைய அடியார்களுடன் மறுமை நாளில் அவன் அவர்களை எழுப்புவானாக. இறைவா! கண்ணியத்திற்குரியவனே! அருள்பாலிப் பவனே! கருணையாளனே! கஷ்டங்களை நீக்குபவனே! இந்த எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வாயாக! ஆமீன் ஸும்ம ஆமீன்.''

*(இஷ்திஹார் 7 டிசம்பர் 1892).*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இத்தகைய துஆக்களுக்கு நாம் வாரிசாகும் வகையில் காதியான் ஆண்டு மாநாட்டை பயன்படுத்திக் கொள்ளும் நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்.

## பெண்கள் ஆண்டு இஜ்திமாவிற்கு

# கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தூதுச் செய்தி

அன்புள்ள இந்திய லஜ்னா இமாவுல்லாஹ் உறுப்பினர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு.

உங்களுக்கு உங்களின் ஆண்டு மாநாட்டைக் கொண்டாடும் நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்ஹம்து லில்லாஹ். இந்த இஜ்திமாவை அல்லாஹ் எல்லா வகையிலும் நன்மைக்கும், அருளுக்கும் காரணமாக அமைப்பானாக. மேலும் இதில் கலந்து கொண்டுள்ள எல்லா சகோதரி களையும், சிறுமிகளையும் அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைத்தருள்வானாக.

நீங்கள் உங்களின் அந்தஸ்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது எனது தூதுச் செய்தியாகும். எத்தகைய அந்தஸ்தில் ஓர் அஹ்மதி பெண்ணை இறைவன் பார்க்க விரும்புகிறானோ அதனைப் பெறுவதற்கு எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டிருங்கள். மேலும் உங்கள் நேரங்களை பயனுள்ளதாகவும் சிறப்பாகவும் பயன்படுத்துங்கள். இறையச் சத்தை மேற்கொள்வதும், மார்க்க திக்ரில் ஈடுபட்டிருப்பதுமே அதற்குரிய முக்கியமான வழிமுறையாகும். உங்களுக்கு இறைவனை நினைவு கூறும் பழக்கம் ஏற்பட்டு விட்டால் அது உங்கள் ஒழுக்கங்களை நாசமாக்குகின்ற ஒவ்வொரு தீய நினைவுகளின் இடத்தையும் பிடித்துக் கொள்ளும். புறம் பேசுதல், தீய வார்த்தைகளைக் கூறுதல் ஆகியவற்றை விட்டும் உங்களுக்கு ஈடேற்றம் கிடைத்து விடும். ஒருவர் இன்னொருவருக்கிடையி லுள்ள உறவுகள் சரியாகும். உங்கள் உள்ளங்கள் தூய்மையடைந்து விடும். உள்ளத்தை விட்டும் அசுத்தத்தை கழுவும் நல்வாய்ப்பு கிடைத்து விடும்.

திக்ரே இலாஹி என்பது எத்தகைய தூய பழக்கம் என்றால் அதன் மூலம் உங்களுக்கு மன அமைதி கிடைத்துவிடும். அலா பிதிக்ரில்லாஹி தத்மயின்னுல் குலூப் என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். அதாவது அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதியடைகின்றன (13:29). இது திருக்குர்ஆனின் வாதம் மட்டுமல்ல. மாறாக, இறைவனை நினைவு கூர்வதிலேயே உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உல்லாசத்திற்காக ஒரு சுதந்திரம் வேண்டும் என ஒருவர் கருதுகிறார் என்றால், சரி. உல்லாசம் தவறான ஒன்றல்ல. உல்லாசம் இருக்கட்டும். ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைகளுக்குள் இருந்தவாறு மகிழ்ச்சியை வெளிப்படுத்தலாம். எந்த உல்லாசம், கேளிக்கை விளையாட்டு, மகிழ்ச்சி அல்லாஹ்வின் நினைவை மறக் கடிக்கச் செய்கின்றதோ அது உண்மையான மகிழ்ச்சி அல்ல. அது ஒருபோதும் மன அமைதிக்குக் காரணமாக அமைய முடியாது.

பிறகு, சிலர் தமது விலை மதிப்புள்ள பெரும் பகுதியை தொலைக்காட்சிக்கு முன்னால் உட்கார்ந்து கழித்து விடுகிறார்கள். **குழந்தைகள் என்ன பார்க்கின்றார்கள் என்பதை வீடுகளில் நீங்கள் கண் காணித்துக் கொண்டிருங்கள்.** இன்றைய காலத்தில் எத்தகைய டி.வி. சேனல்களும், கடை வீதிகளில் எத்தகைய ஃபிலிம்களும் கிடைக்கின்றனவென்றால், அவற்றால் ஒழுக்கங்கள் நாசமாகி விடுகின்றன. உங்களுடைய அறிவின் தரத்தை அதிகப்படுத்துகின்ற அளவுக்கு அல்லது சிறிய கேளிக்கை என்ற அளவுக்கு மட்டும் இந்த கண்டுபிடிப்பு சாதனங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்த டி.வி. சேனல்களின் பாதிப்புக்குள்ளாகி சில இளமையான ஆண்களும், பெண்களும் மனிதனை வெட்கக் கேடான விஷயங்களை செய்ய கட்டாயப்

படுத்தும் ஃபேஷன்களை மேற்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். வெட்கத்தின் எல்லைகளுக்குள் இருக்கும் அளவிலான ஃபேஷனை மேற்கொள்ளுங்கள். குறிப்பாக பெண்கள் வெட்கத்தின் வட்டத்திற்குள் இருந்து கொண்டு எத்தகைய ஃபேஷனை மேற்கொள்ள வேண்டுமென்றால், அது அவர்களை மற்றவர்களை விட தனிச் சிறப்பாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் வித்தியாசம் தென்பட வேண்டும்.

எத்தகைய வாழ்க்கை நெறிமுறையை இறைவனும், அவனுடைய தூதரும் நமக்குக் கட்டளையிட்டுள்ளார்களோ அதை மேற்கொண்டு நடங்கள். இன்றைய காலத்தில் இணையத்தை (Internet) பயன்படுத்துவதும் முற்போக்கு சிந்தனையாகக் கருதப்படுகிறது. ஆனால் அவற்றை கூட தேவையின்றி பயன்படுத்துவது தவறாகும். தவறான இடங்களில் தொடர்புகள் வைப்பதிலிருந்தும், ஆண்களுடன் ஈ-மெயில்களை பரிமாறுவதிலிருந்தும் அஹ்மதி பெண்கள் தவிர்ந்து கொள்ள வேண்டும். ஓர் அஹ்மதி பெண்ணின் உள்ளத்தில் இத்தகைய சுதந்திர சிந்தனைகளை உருவாக்குவது அருள் அல்ல; மாறாக சாபமாகும். ஏனெனில் சுதந்திரம் என்ற பெயரில் எந்தப் பெண் குழந்தைகள் இவ்விதமான தொடர்புகளை உருவாக்கிக் கொள்கின்றார்களோ, நட்புறவுகளை உருவாக்கிக் கொள்கின்றார்களோ அப்படிப்பட்டவர்கள் எப்பொழுதும் தமது வீட்டையும் நாசமாக்கிவிடுகிறார்கள்; மற்ற பெண்களின் வீடுகளையும் நாசமாக்கி விடுகிறார்கள். தமது குடும்பத்திற்கும் அவப் பெயருக்குக் காரணமாக அமைந்தார்கள். எனவே, அஹ்மதி பருவப் பெண்கள், அஹ்மதி பெண்கள் தமது மானத்தைக் காப்பாற்ற வேண்டும்; தமது கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும்; தமது பரிசுத்தத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

சில நாட்களுக்கு முன் நாம் ரமலானின் அருளுக்குரிய மாதத்தைக் கடந்தோம். எவ்வாறு எல்லா வகையிலும் நன்மை மற்றும் அருள்களின் சுற்றுச் சூழலாக இருந்தது! நமது நேரங்கள் எந்த அளவுக்கு இறைவனுக்காக அர்ப்பணமாயின. தஹஜ்ஜுத் தொழுகை நடந்து கொண்டிருந்தது; இறைவணக்கங்கள், அதிகமான வணக்கங்கள் நிறைவேறிக் கொண்டிருந்தன. திருக்குர்ஆனை ஓதுவதில் நேரம் கழிந்து கொண்டிருந்தது. ஆக, ஆன்மீகத் தூய்மைக்கான ஒரு வசந்தகாலம் உருவானது. இனி அந்த தூய சூழ்நிலையை தொடர்வது அவசியமாகும். அப்போதுதான் இந்த அருளுக்குரிய நாட்களில் இறைவன் தனது அருளால் எத்தகைய ஆன்மீகப் பயிற்சியை செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினானோ அது நமது வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக மாறிவிடும். எனவே இறைவனை நினைவு கூர்வதை உங்களுக்குரிய தனித் தன்மையாகக் கொள்ளுங்கள். இறையச்சத்தினால் உங்கள் வாழ்க்கையை அழகுபடுத்துங்கள். ஏனெனில் உங்களுடைய நல்ல முன்மாதிரிகளினால் வருங்கால தலைமுறைகள் வாழ்க்கையின் நெறிமுறைகளைக் கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கிறது. அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்

**எளியவன்**

**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்**

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

**NABI VAZHI** **Tamil Monthly November 2008**

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**

# தஞ்ஜாவூர் புத்தகக் கண்காட்சியில் எமது பங்கேற்பு

கடந்த 15-09-2008 அன்று தஞ்சை பல்கலைக் கழகம் தமது பல்கலைக் கழகத் தொடக்க விழா, மற்றும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா ஆகியவற்றையொட்டி ஒரு முற்றமிழ் விழாவினை பல்கலைக் கழக வளாகத்தில் நடத்தியது.

இதனையொட்டி தமிழ் பல்கலைக் கழகத்தின் பதிப்புத் துறை ஒரு புத்தகக் கண்காட்சிக்கான ஏற்பாடு செய்திருந்தது. 15-09-2008 முதல் 19-09-2008 வரை ஐந்து நாட்கள் தமிழ் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள கரிகாலச் சோழன் அரங்கில் அமையப் பெற்ற இப்புத்தகக் கண்காட்சியில் தென்னிந்தியாவிலுள்ள புத்தக பதிப்பாளர்களும், விற்பனையாளர்களும் அரங்கம் அமைத்து பங்கேற்றனர்.

தமிழ் பல்கலைக் கழகத்தின் அழைப்பினை ஏற்று சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தும் தனது இஸ்லாமிய புத்தக அரங்கினை கண்காட்சியில் இடம் பெறச் செய்தது. எமது அரங்கில் பல்வேறு உலக மொழிகளில் வெளியிடப்பட்ட திருக்குர்ஆன் மொழியாக்கங்களும், இஸ்லாமிய மார்க்க நூல்களும் பெருமளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

தஞ்சாவூரில் முதன் முறையாக அமையப் பெற்ற எமது புத்தக அரங்கினை அங்கு வருகை தந்த தமிழக வணிக அமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும், அரசியல் பிரமுகர்களும் பார்வையிட்டனர். எமது புத்தக அரங்கிற்கு வருகை தந்த தமிழ் பல்கலைக் கழக பேராசிரியர்களும், மாணவர்களும், தமிழ் கூறும் நல்லுலகின் பெரியார்களும், பொது மக்களும் இஸ்லாமிய நூல்களை வாங்கிச் சென்றனர்.

தஞ்சை வாழ் மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியினை எட்டவைக்கின்ற வாய்ப்பை இந்த அரங்கின் மூலமாக எமக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

தகவல்:

**M. நயீம் அஹ்மத்**

தலைவர், புத்தகக் கண்காட்சிக் குழு
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சென்னை

## நபி வழி சந்தா விபரம்

ஆண்டு சந்தா - **ரூபாய் 80/-** தனி பிரதி - **ரூபாய் 7/-**

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K.NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : நிர்வாகி - **நபி வழி** அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600 024. **Ph : 2481 7174**

If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**
**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. **Ph : 2481 7174**

Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**.
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.